**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

OS 159/2023

17.03.2026.

PW- 1

**வா.சா.1. நட்சத்திரம், த/பெ. சிவஞானம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் தாக்கல் செய்துள்ள பிராமிசரி நோட்டிலும், எனது வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் என்னுடைய முகவரியை என்னவாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் - நடுத்தெரு, கருவாக்குறிச்சி என்று குறிப்பிட்டுள்ளேன். எனது நிருபண வாக்குமூலத்திலும் அதே முகவரிதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரிதான். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் - அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக இருக்கிறார். தற்போது அவர் பணி ஓய்வு வயதை நெருங்கிவிட்டார் என்றால் - சரிதான். பிரதிவாதி எப்படி பழக்கம் என்றால் - நீண்ட கால நண்பர் ஆவார். பிரதிவாதி யார் மூலமாக அறிமுகம் ஆனார் என்றால் - அவரது மனைவி மூலமாக எனக்கு பழக்கம். பிரதிவாதி குடும்பம் எனக்கு நன்கு தெரியும். என்ன தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றால் - 12.04.2022 ம் தேதியன்று கொடுத்தேன். கடைத்தெருவில் வைத்துக்கொடுத்தேன். நேரம் நினைவில்லை. இரவு நேரம் சரியான நினைவில்லை. சாட்சி சுமார் 08.00 மணியிருக்கும் என்கிறார். கடைத்தெருவில் காமாட்சி அம்மன் கோவில் அருகில் வைத்துக்கொடுத்தேன். இந்த விவரத்தினை தான் எனது வழக்கறிஞர் அறிவிப்பு, நிருபண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரிதான். எனது வழக்குரையில், கருவாக்குறிச்சி கிராமத்தில் உள்ள எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்ததாக சொல்லியிருப்பது சரியா தவறா என்றால் - தவறு. மன்னார்குடி கடைத்தெருவில் வைத்து பணம் கொடுத்தேன். ரூ.3 இலட்சம் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் - இல்லை. நெல் விற்ற பணத்திலிருந்து கொடுத்தேன். நெல் விற்ற பணத்திற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் - பிரைவேட்டில் போடுவதால் இல்லை. நான் வருமான வரி செலுத்துகிறனோ எ ன்றால் - இல்லை. நான் விவசாயிதான். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பண பரிவர்த்தனை செய்தால் வங்கி மூலமாக தான் செய்யவேண்டும் என்றும் ரூ.3 இலட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் சொன்னால் - சரியல்ல. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு பிரதிவாதிக்கும் எனக்கும் சீட்டு போட்டு சின்ன மன வருத்தம் ஏற்பட்டது என்றால் -இல்லை. பிரதிவாதியின் மாமியார் என்னிடம் சீட்டு போட்டு முறையாக பணம் செலுத்தி வந்தார் என்றும் நான் சீட்டு பணத்தை கொடுக்காததால் மன வருத்தம் ஏற்பட்டது என்றால் - சரியல்ல. ஆனால் என்னிடம் சீட்டு சேர்ந்திருந்தார். சீட்டு சம்மந்தமாக நான் பணம் கொடுக்கவில்லை என்று காவல்துறையில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் - இல்லை. பிரதிவாதிதான் கொடுத்தார். **(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.